# பட்டம் பெறுமுன்னே பத்தில் எழுவருக்கு வேலை கிடைத்தது




நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட அதிபர் ஹலிமா யாக்கோப், புதிய பட்டதாரிகளுடன் உரையாடி மகிழ்ந்தார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இவ்வாண்டில் பட்டம் பெறுவதற்கு முன்னரே நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மாணவர்கள் பத்தில் எழுவருக்கு வேலை கிடைத்து விட்டது.

அந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட கருத்தாய்வின்மூலம் இது தெரியவந்தது.

முந்தைய ஆண்டுகளிலும் கிட்டத்தட்ட இதே விகிதத்தில் பட்டம் பெறுவதற்கு முன்னரே அப்பல்கலைக்கழக மாணவர்களுக்கு வேலை கிடைத்தது.

2018ல் பத்தில் ஏழுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெறும் முன்பே வேலை தேடிக் கொண்டனர். 2017ல் மூன்றில் இருவருக்கும் 2016ல் பத்தில் எழுவருக்கும் பட்டம் பெறுமுன் வேலை கிடைத்துவிட்டது.

அந்தப் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டிற்கான பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நேற்று தொடங்கியது. அங்கு பயின்றோரில் 272 மாணவர்களுக்கு நேற்று பட்டம் வழங்கப்பட்டது

அடுத்த புதன்கிழமை வரை மேலும் 19 பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிகள் அங்கு நடைபெறும். அவற்றில் 6,097 மாணவர்களுக்கு இளங்கலைப் பட்டமும் 3,356 மாணவர்களுக்கு முதுகலைப் பட்டமும் வழங்கப்படும்.

பட்டம் பெறுவதற்கு முன்னரே வேலை கிடைத்த மாணவர்களுள் சிலர், அந்த வேலையை ஏற்காமல் மேல்படிப்பைத் தொடர முடிவு செய்துள்ளனர்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட அதிபரும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான திருவாட்டி ஹலிமா யாக்கோப், திருமதி மார்கரெட் லியன், 77, சர் கீத் ஓ'நியன்ஸ், 74, ஆகியோருக்கு கௌரவ முனைவர் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

அந்தப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் மார்கரெட் லியன் தொழில் வெற்றி நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் அப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 33,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கெடுத்து, பயன்பெற்றுள்ளனர். மாணவர்களிடம் தார்மீகப் பண்புநெறிகளையும் தனிப்பட்ட திறன்களையும் வளர்த்து, அவர்களை தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதே அந்த நிலையத்தின் நோக்கம். இந்த நிலையம் 2013ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

லண்டன் இம்பீரியல் கல்லூரியின் தலைவராக இருந்தபோது, அந்தக் கல்வி நிலையத்திற்கும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கும் இடையே பங்காளித்துவத்தை ஏற்படுத்தி, லீ கோங் சியன் மருத்துவப் பள்ளியை ஏற்படுத்த முக்கியக் காரணமாக விளங்கினார் சர் கீத்.

அந்த மருத்துவப் பள்ளியில் இருந்து கடந்த ஆண்டுதான் முதல் தொகுதி மருத்துவப் பட்டதாரிகள் வெளிவந்தனர். அவர்களுக்கு நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் இம்பீரியல் கல்லூரியும் இணைந்து எம்பிபிஎஸ் சான்றிதழ் வழங்கின.